செ.வெ. எண்: 31 நாள்: 12.01.2012

# செய்தி வெளியீடு

பயிர் விளையக் காரணமாய் உள்ள பகலவனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையினை தங்கள் சொந்த ஊர்களில் உறவினர்களுடனும், நண்பர்களுடனும், தமிழ் மக்கள் கொண்டாடுவது வழக்கம்.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழக மக்கள் பொலிவுடன் கொண்டாட தங்கள் பிறந்த ஊருக்கு எவ்வித சிரமமுமின்றி சென்று திரும்பும் வகையில், பொங்கல் திருநாளை ஒட்டி, அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சிறப்புப் பேருந்துகளை இயக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, 12 ஆம் தேதி அன்று 1,115 பேருந்துகளும், 13 ஆம் தேதி அன்று 1,965 பேருந்துகளும், 14ஆம் தேதி அன்று 1,965 பேருந்துகளும் மற்றும் 15 ஆம் தேதியன்று பயணிகளின் தேவைக்கேற்ப உரிய எண்ணிக்கையிலும் பேருந்துகளை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து இயக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதில், அனைத்து மாவட்ட தலைநகரங்கள் மற்றும் மாநிலத்தின் முக்கிய பகுதிகளுக்கு சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து இம்மாதம் 12ஆம் தேதி அன்று 557 பேருந்துகளும், 13 ஆம் தேதி அன்று 1,257 பேருந்துகளும் மற்றும் 14 ஆம் தேதி அன்று 1,257 பேருந்துகளும் இயக்கப்படும்.

மேலும், பொங்கல் திருநாளை குடும்பத்தினருடன் குதூகுலமாக கொண்டாடி மீண்டும் பணி நிமித்தமாக ஊர் திரும்பிடும் பொது மக்களின் நலன் கருதி இதே அளவிலான பேருந்துகளை 17ஆம் தேதி முதல் 22ஆம் தேதி வரை இயக்கிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்கள் சிரமமின்றி பயணம் செய்வதற்கு ஏதுவாக, பொங்கல் பண்டிகையை ஒட்டி இயக்கப்படும் சிறப்புப் பேருந்துகளுக்கும், உடனடி இணையதள வழி பதிவு திட்டத்தின் கீழ் ( Online Ticket Reservation System) பயணச்சீட்டு முன்பதிவு செய்திடும் வசதியையும் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இது மட்டுமல்லாமல், பொங்கல் பண்டிகையையொட்டி, அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் பேருந்துகள் குறித்து சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலுள்ள அரசு விரைவு போக்குவரத்துக் கழக அலுவலக தொலைபேசி எண். 24794709-க்கு பொதுமக்கள் புகார் தெரிவிக்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அந்த புகார்கள் மீது உரிய நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும்.

மேலும், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஜனவரி 14 முதல் 17 வரை சென்னை மற்றும் புறநகர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுற்றுலா பொருட்காட்சி, அண்ணா சதுக்கம், காந்தி மண்டபம், வி.ஜி.பி., முட்டுக்காடு, கோவளம், எம்.ஜி.எம்., மாமல்லபுரம், வண்டலூர் உயிரியல் பூங்கா, கிஷ்கிந்தா, குயின்ஸ் லாண்டு போன்ற பல்வேறு சுற்றுலா மையங்களுக்கு 250 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், மக்கள் எவ்வித சிரமமுமின்றி தங்கள் இல்லங்களுக்கு சென்று, பொங்கல் பண்டிகையை தங்கள் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக கொண்டாட இயலும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 12.1.2012